**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. அறம் என்ற சொல்லிற்கு இணையான ஆங்கிலச் சொல் எது?
2. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் யார்?
3. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் யார்?
4. இன்னா நாற்பதின் ஆசிரியர் யார்?
5. 'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்' எனத் தெடாங்கும் நூல் எது?
6. பிற்கால அறநூல்கள் எத்தனை என ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
7. ஆத்திமாலையைச் சூடிய இறைவன் யார்?
8. வெற்றிவேற்கையின் ஆசிரியர் யார்?
9. சிவபிரகாச சுவாமிகள் எழுதிய அறநூல் எது?
10. சிற்றிலக்கியங்கள் எத்தனை?
11. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்?
12. சிறிய திருமடலைப் பாடியவர் யார்?
13. பரணி இலக்கியம் சுட்டும் துறை எது?
14. தொல்காப்பியர் குறிப்பிடும் பள்ளு இலக்கியத்திற்குரிய பெயர் யாது?
15. படிக்காசுப் புலவர் இயற்றிய சதக நூல் எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிறுபஞ்ச மூலம் – பெயர்க்காரணம் தருக.
2. ஔவையார் பாடிய நான்கு கோடிப் பாடலின் பொருளை எழுதுக.
3. பேரிலக்கியம், சிற்றிலக்கியம் – வேறுபடுத்துக.
4. குறவஞ்சியின் பெயர்க்காரணத்தோடு பொருத்துக.
5. பெண்கள் மடலேற்றம் குறித்துக் கூறும் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
6. பரணி இலக்கியத்தின் இலக்கணத்தைக் குறிப்பிடுக.
7. முக்கூடல் என்பதன் பொருள் யாது?
8. சதக இலக்கியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) நாலடியார் அறநூல் என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) ஆத்திசூடி கற்பிக்கும் வாழ்வியல் உண்மைகளைத் தொகுத்து எழுதுக.

2. (அ) மடல் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கலிங்கத்துப்பரணியில் வருணனை குறித்து விளக்குக.

3. (அ) சிற்றிலக்கியங்களில் நும் பாடப்பகுதி மருத்துவ நூல்கள் போதிக்கும் மருத்துவக் குறிப்புகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பிள்ளைத் தமிழ் இலக்கியம் குறித்துக் கட்டுரை வரைக.

***